உ

"சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக"

ஸ்ரீ பூசாரி வேளாளத் தம்பிரான் கட்டளை

(இணைப்பு)

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

சென்னிமலை - 638 051

பெருந்துறை வட்டம், ஈரோடு மாவட்டம்



tnhrce.org

யாமிருக்க பயமேன்!

# பங்குனி உத்திர தேர்த் திருவிழா

27.03.2018 முதல் 01.04.2018 வரை

தேர் வடம் பிடித்தல் : 30.03.2018 (பசலி 1427) நேரம் : காலை 6.00 - 7.00

"சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக"

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

சென்னிமலை - 638 051

## பங்குனி உத்திர தேர்த்திருவிழா அழைப்பிதழ்

மூவருள் மூவர் முதலே சரணம்! முகில் வண்ணன் மருகா முருகா சரணம்!
கூவிய காலாயுதனே சரணம்! குலவு கை வேலாயுதனே சரணம்!
மா இரு கூறாய் வகிர்வாய் சரணம்! மலைமுனி குருவாய் வருவாய் சரணம்!
தேவர்கள் சேனாபதியே சரணம்! சிரகிரி வாழ்வே சரணம் சரணம்!!

(தலபுராணப் பாடல்)

அன்புடையீர்,

சீர்பரவிய பூஞ்சோலை சென்னியங்கிரி, ஈரோடு மாவட்டம் ஈரோட்டிலிருந்து பழனி செல்லும் தென்திசை நெடுஞ்சாலையில் 28-வது கிலோமீட்டரில் உள்ளது. குமரக்கடவுள் பாலதண்டாயுத மூர்த்தம் கொண்டு அருள்பாலிக்கும் இம்மலை கடல் மட்டத்திலிருந்து 1749 அடி உயரத்தில் உள்ளது. ஆண்டவனின் சன்னதியை அடைய 1320 திருப்படிகள் உள்ளன. வாகனங்கள் செல்ல தார் சாலையும் உள்ளது.

அருணகிரிநாதர் திருப்புகழில் ஐந்து பாடல்களில் சென்னிமலை ஆண்டவனைத் துதித்து பாடி படிக்காசு பெற்றுள்ளார். தேவராய சுவாமிகள் கந்தர் சஷ்டி கவசத்தில் "*சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக*" என அழைத்து அந்நூலை இங்கு அரங்கேற்றினார். 18 சித்தர்களில் ஒருவரான பின்னாக்கு சித்தர் வாழ்ந்து முக்தியடைந்த திருத்தலம். செங்கத்துறை பூசாரி, வேட்டுவபாளையம் பூசாரி போன்ற அருளாளர்கள் வாழ்ந்து முக்தியடைந்த புண்ணியஸ்தலம். மாட்டு வண்டி மலையேறிய அதிசயம் மற்றும் எருதுகள் மூலம் தினசரி படிகள் வழியாக திருமஞ்சனம் கொண்டு செல்வது போன்ற அநேக அதிசயங்கள் கண்டது இச்சென்னிமலை. சஷ்டி விரதம் இருந்து இத்திருக்கோயிலுக்கு வருபவர்களுக்கு சந்தான பாக்கியம் கிடைக்கப் பெறுவது கண்கூடு. இத்தகைய சிறப்பு கொண்ட இத்திருக்கோயிலில் திருப்பணிகள் யாவும் நிறைவு செய்து ஸ்ரீ ஜய வருடம் ஆனி மாதம் 23-ம் நாள் (07.07.2014) திங்கட்கிழமை மகா கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற்றது.

tnhrce.org

அருள்மிகு வள்ளி, தெய்வானை சமேத முத்துக்குமார சுவாமிக்கு நாளது ஸ்ரீ ஹேவிளம்பி வருடம் **பங்குனி மாதம் 16-ம் நாள் 30.03.2018-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்குள் நடைபெறும் பங்குனி உத்திர இரதோற்சவத்திற்கு** வருகைதந்து அருள்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**எம். அருள்குமார்,** எம்.ஏ.,
செயல் அலுவலர்

**ப. முருகையா,** எம்.ஏ., பி.எல்.,
தக்கார் / உதவி ஆணையர்

## திருவிழா நிகழ்ச்சி குறிப்பு

27.03.2018

பங்குனி 13-ம் நாள் செவ்வாய்கிழமை

**காலை 6.00 மணிக்கு கணபதி ஹோமம்**

(உபயம் K.R. சரவணக்குமார்
165, பாப்பாங்காடு, குமராபுரி, சென்னிமலை)

**இரவு : கிராம சாந்தி**

28.03.2018

பங்குனி 14-ம் நாள் புதன்கிழமை

**காலை : கொடியேற்றம்**

(சென்னிமலை இசை வேளாளர்கள் சமூகம்)

29.03.2018

பங்குனி 15-ம் நாள் வியாழக்கிழமை

**காலை : ஸ்ரீ பூசாரி வேளாளத் தம்பிரான் மடம் மண்டப கட்டளை**

**இரவு : திருக்கல்யாணம்**

(உபயம் : திரு. வீரமலை செட்டியார், சென்னிமலை)
பூந்துறை காடைகுல கொங்கு வேளாளக் கவுண்டர்கள் மடம் மண்டபக்கட்டளை.

30.03.2018

பங்குனி 16-ம் நாள் வெள்ளிக்கிழமை

**பங்குனி உத்திரம்** tnhrce.org

**காலை 6.00 மணிக்குமேல் காலை 7.00 மணிக்குள் மீனலக்கினத்தில்**
சுவாமி ரதாரோகணகாட்சி **திருத்தேர் வடம் பிடித்தல்**

**காலை 7.00 மணிக்கு**

**அடிவாரம் தேவஸ்தான மண்டபத்தில் அன்னதானம் நடைபெறும்**

(உபயம் : அக்னி நட்சத்திர அன்னதான விழாக்குழு, சென்னிமலை)

**மாலை 5.00 மணிக்கு தேர் வடம் பிடித்தல் – நிலை சேர்தல்**

இரவு : வெள்ளோடு நாட்டுக்கவுண்டர்கள் மடம் மண்டபக்கட்டளை

31.03.2018

பங்குனி 17-ம் நாள் சனிக்கிழமை

**காலை : பரிவேட்டை**

நசியனூர் நாட்டுக்கவுண்டர்கள் மடம் மண்டபக்கட்டளை
பகல் : ஈங்கூர் கிராம நாட்டுக்கவுண்டர்கள் மடம் மண்டபக்கட்டளை

**இரவு : தெப்பத்தேர்**

எழுமாத்தூர் பனங்காடான் குலம்,
செல்லங்குலம் கொங்கு வேளாளக் கவுண்டர்கள் மடம் மண்டபக்கட்டளை

1.04.2018

பங்குனி 18-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை

**காலை 8.00 மணிக்கு : மகாதரிசனம்**

**இரவு 8.00 மணிக்கு : மஞ்சள்நீர்**

மரியாதைக்கும் நன்றிக்கும் உரிய உபயதாரர்கள் :

1. மலைக்கோயில் பச்சைப்பந்தல்
திரு. **V.K.** பழனிச்சாமி
**V.K.P.** இன்ஜினியரிங் இந்தியா (பி) லிட்
வெட்டுக்காட்டுவலசு, ஈங்கூர்

2. வாழை மரங்கள்
**K.P.K.**வீரக்குமார்
165, குருவாயூரப்பன் நகர்,
முத்தணம்பாளையம், திருப்பூர்

3. தேர் அலங்கார மாலைகள்
ஏ. நவநீத கிருஷ்ணன்
சப்தகிரி ஏஜென்சீஸ், சென்னிமலை

4. சுவாமி பரிவட்டம்
திரு. எஸ்.எஸ். ஜெயபாலாஜி
15, கலைவாணர் வீதி
வீரப்பன் சத்திரம், ஈரோடு

5. சுவாமி புறப்பாடு
ஸ்ரீ பாத ஆட்கள் உணவு அளித்தல்
அக்னி நட்சத்திர அன்னதான விழாக்குழு
சென்னிமலை

---

இணையதளத்தில் **"e.donation"** வசதி செய்யப்பட்டுள்ளது.
இணையதள முகவரி : www.chennimalaitemple.tnhrce.in

| E - Chariot | E- Annadhanam | E - Donation |
|---|---|---|
|  |  |  |
| Book Now | Book Now | Book Now |

மலைக்கோயிலில்
வேங்கை மரத்தேர் இழுக்க கட்டணம் ரூ.700/-
நேரம் இரவு 7.00 மணி

மலைக்கோயிலுக்குச் செல்ல பஸ் வசதி உண்டு
தினசரி காலை 8.00 மணிக்கு அடிவாரத்தில் பேருந்து புறப்படும்.



திருக்கோயில் ஸ்தல வரலாறு விற்பனைக்கு கிடைக்கும். **ரூ. 20/-**

## "தானத்திலே சிறந்தது அன்னதானம்"

## மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதானத் திட்டம்

| | |
|---|---|
| ஒருநாள் நன்கொடை | : ரூ.2,500/- |
| வருடத்தில் ஒருநாள் அன்னதானம் செய்ய வைப்புத் தொகை | : ரூ.30,000/- |

tnhrce.org

**சென்னிமலை திருத்தலம்**

இணையதள முகவரி : www.chennimalaitemple.tnhrce.in
மின்னஞ்சல் முகவரி : chennkovil@gmail.com
மலைக்கோயில் : (04294) 292595 அலுவலகம் : (04294) 250223

அழைப்பிதழ் உபயம் : அபர்ணா ஸ்ரீ பிரிண்டோ கிராபிக்ஸ் கோவை - 18. போன் : 80981 66999